பட்டுக்கோட்டை தீப்பெட்டித் தொழிற்சாலை

* 64 வினா—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா—

(அ) கதர், கிராமத் தொழில் வாரியத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் உள்ள தீப்பெட்டித் தொழிற் சாலையை அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற் சாலையாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) கலைக்கப்பட்டுள்ள பட்டுக்கோட்டை தீப்பெட்டித் தொழி லாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து நிலமும், கட்டிடமும் வாங்கப்பட்டு கதர், கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில எண்ணெய் மற்றும் உப பொருட்கள் கூட்டுறவு சம்மேளனம், அரிசி, தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியவும் சாதனம் ஒன்றை இங்கு நிறுவும் திட்டத்தை மேற்கொண் டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், அந்தத் தீப்பெட்டித் தொழிற் சாலையில் கிட்டத்தட்ட 100 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அப்படியிருக்கையில் அந்தத் தொழிற்சாலையை கலைப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை கதர், கிராமத் தொழில் வாரியத்தினால் ஆரம்பித்து நடத்தப்படவில்லை. தொழில் துறையின் சார்பில் நடத்தப்பட்டு வந்தது. ஆரம்ப காலத்திலிருந்தே அதில் ஏராள மான நஷ்டம் வந்ததால், அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையை மூடிவிட்டார்கள். அதற்குப் பிறகு வெறுமனே இருந்து வந்த அந்த இடத்தை தற்போது கதர், கிராமத் தொழில் வாரியம் பெற்றுக் கொண்டு, அங்கே அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை துவங்க உத்தேசித்துள்ளது.

Pre-matriculation scholarships for girls.

* 65 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether the rate of pre-matriculation scholarships for girls belonging to Scheduled Castes and Scheduled Tribes has been increased; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.

(இ) மெட்ரிக் படிப்பிற்கு முந்திய நிலையில் படிப்பை நிறுத்துகின்ற அரிசன, பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவிகளின் வீதம் மாணவர்களின் வீதத்தைவிட அதிகமாக உள்ளது. சமுதாய, பொருளாதார காரணங்கள், மெட்ரிக் படிப்பிற்கு மேல் தொடர்ந்து படிக்க வேண்டுமென்ற அவர்களது உற்சாகத்தைக் குறைக்கிறது. மெட்ரிக் படிப்பிற்கு முந்திய நிலையில் படிப்பினைத் தொடர்ந்து படிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்களின் படிப்பு உதவித் தொகையை மாநில அரசு 1974-75-ம் ஆண்டிலிருந்து 50 விழுக்காடு அதிகமாக உயர்த்தியுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இது மாணவியருக்கு மாத்திரம் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேமாதிரி ஏன் மாணவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படவில்லை? அப்படிக் கொடுப்பதற்கு அரசு வழி செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இந்தக் கேள்வியே பிரி-மெட்ரிக் முன்னாலே உள்ள படிப்பைப் படிக்கிற அரிசன, பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை விட மாணவியர்கள் அதிகமாக பள்ளியை விட்டு நின்று விடுகிறார்களே, அதற்குக் காரணம் என்ன, உபகாரச் சம்பளம் இல்லையா என்ற அடிப்படையில் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், 1974-75-ம் ஆண்டிலிருந்து மாணவர்களை விட மாணவியர்களுக்கு வழங்குகிற தொகையை 50 விழுக்காடு அதிகப்படுத்திக் கொடுத்து இருக்கிறோம் என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்தேன். மாணவர்கள் பெரும்பாலும் விடுதிகளில் வந்து தங்கிப் படிக்கிறார்கள். 4 வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவர்கள் எங்கே விடுதி இருந்தாலும் அங்கே போய்விடுகிறார்கள். அங்கே அவர்களுக்கு இலவச உணவு, உடை, இருக்க இடம் எல்லாம் அளிக்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 600 விடுதிகள் இருந்தும், அதிலே இரண்டு மடங்குக்கு அதிகமாக மாணவர்கள் இருக்கிறார்கள். மாணவியர்களுக்குத்தான் சில சங்கடங்கள் இருக்கின்றன. அதற்காகத்தான் தொகை உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

சர்க்கரை ஆலைகள் "லே ஆஃப்" செய்ததும் தொழிலாளர் பாதிப்பும் பிற விளைவுகளும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. எ. ஆர். மாரிமுத்து ஆகியோர்

'Serious situation arising out of lay-off in the Sugar Mills in the State including Sakthi, Pugaloor, Pettaivaithalai, Kottur, etc., and consequent non-production of sugar affecting both the workers and the growers and the economy of the State generally' என்ற பொருள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவர்கள் சுருக்கமாக விளக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : உதவி சபாநாயகர் அவர்களே, இது சர்க்கரைத் தொழிலாளர்களை மாத்திரம் அல்லாமல், சர்க்கரைத் தொழிலையே பாதிக்கக்கூடிய அளவுக்கு மிக முக்கிய மான விஷயமாக இருக்கிற காரணத்தால்

I crave your indulgence to allow me some time to explain the situation which is prevailing now.

சார், பொதுவாக நம்முடைய தமிழ் நாட்டில் தான் 17 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இந்தியாவில் இருக்கக்கூடிய 207 சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாவதில், அதிகமான அளவுக்கு தமிழ் நாட்டு சர்க்கரை ஆலைகளில்தான் உற்பத்தியாகின்றது.